சுருக்கம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை - அங்கன்வாடிப் பணிகள் – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் இயங்கும் குழந்தைகள் மையங்களில் அங்கன்வாடிப் பணியாளர் பணியிடங்களை உரிய தகுதிகள் பெற்ற 5 ஆண்டுகள் பணி முடித்த குறு அங்கன்வாடிப் பணியாளர்களைக் கொண்டு நிரப்புதல் – ஆணையிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந-7(2)) துறை

அரசாணை (நிலை) எண்.47 நாள் 02.08.2022

திருவள்ளுவராண்டு 2046

சுபகிருது, ஆடி 17

படிக்கப்பட்டவை

1 அரசு ஆணை (நிலை) எண்.110, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (ச.ந.7(1)) துறை, நாள் 14.05.2012.

2 அரசாணை (நிலை) எண்.5 சமூகநலம் (ம) சத்துணவுத் திட்டத் (சந 8(2)) துறை, நாள் 05.02.2021.

3 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், இயக்குநர் மற்றும் குழும இயக்குநரின் கடித ந.க.எண்.7091/இ3-2/2018, நாள் 10.01.2022, 08.02.2022 மற்றும் 25.04.2022.

+++++

ஆணை:-

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் செயல்படும் குழந்தைகள் மையங்கள் /குறுமையங்களுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட அங்கன்வாப் பணியாளர், குறு அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்களை நிரப்புவதற்கான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டதுடன் அப்பணியிடங்களில் நியமனம் செய்யப்படுபவர்களுக்கான தகுதிகளை (கல்வி, வயது, தூரச்சுற்றளவு etc) நிர்ணயம் செய்தும் ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் அவர்கள், மைய அரசின் வகாட்டி நெறிமுறைகள் மற்றும் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி 10 ஆண்டுகள் அங்கன்வாடி உதவியாளராக நிறைவான பணிமுடித்த தகுதிவாய்ந்த (வயது, கல்வித்தகுதி) அங்கன்வாடி உதவியாளர்களை கொண்டு 25% அங்கன்வாடிப் பணியாளர் பணியிடங்கள் நிரப்பப்படுவதாகவும் மேலும் மேற்கண்ட அரசாணையில் குறு அங்கன்வாடிப் பணியாளர்களைக் கொண்டு முதன்மை அங்கன்வாடிப் பணியாளர் பணியிடங்களை நிரப்புவது தொடர்பாக வழிமுறைகள் ஏதும் வெளியிடப்படவில்லை என்றும் மைய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளில் 25% அங்கன்வாடி பணியாளர் பணியிடங்களை 10 ஆண்டுகள் திருப்திகரமாக பணி முடித்த தகுதியுள்ள அங்கன்வாடி உதவியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கி நிரப்பிட தெரிவிக்கப்பட்டுள்ள போதும், குறு அங்கன்வாடி பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்குவது குறித்து நாளது தேதி வரை மைய அரசிடமிருந்து எவ்வித வழிமுறையும் பெறப்படவில்லை என்றும், புதிதாக நியமனம் செய்யப்படும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு சில காலம் பணிபுரிந்த பின்னரே திட்டப் பணிகளை திறன்பட செயல்படுத்த இயலும் என்றும், ஆனால் குறு அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு அங்கன்வாடிப் பணியாளராக பதவி உயர்வு வழங்கினால் திட்ட செயல்பாட்டில் அனுபவம் உள்ள குறு அங்கன்வாடி பணியாளர்களால் திட்டப் பணிகளை முழுமையாக மேற்கொள்ள இயலும் என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் அவர்கள், இனிவரும் காலங்களில், அங்கன்வாடிப் பணியாளர் காலிப்பணியிடங்களில் தகுதி வாய்ந்த குறு அங்கன்வாடி பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கி நிரப்பிய பின்னர் மீதம் உள்ள அங்கன்வாடிப் பணியாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்றும் அவ்வாறு இல்லையெனில் 5 ஆண்டுகள் பணியாற்றிய குறு அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு அங்கன்வாடிப் பணியாளராக பதவி உயர்வு வழங்க வேண்டும் என்றும், அங்கன்வாடிப் பணியாளர் பணியிடங்களில் 25% பணியிடங்களை தகுதிவாய்ந்த அங்கன்வாடி உதவியாளர்களைக் கொண்டு நிரப்புவதால் 25% அங்கன்வாடிப் பணியாளர் பணியிடங்களை குறு அங்கன்வாடிப் பணியாளர்களை கொண்டு நிரப்ப ஆணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

4. இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் அவர்களின் கருத்துவை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. அதனடிப்படையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத்தின் கீழ் உள்ள குழந்தைகள் மையங்களில், அங்கன்வாடிப் பணியாளர் நிலையில் ஏற்படும் காலிப்பணியிடங்களில், மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில்

அங்கன்வாடிப் பணியாளர் பணிக்கென நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தகுதிகளைப் (வயது, கல்வி, தூரச்சுற்றளவு) பெற்ற, 5 ஆண்டுகள் நிறைவான பணி முடித்த, குறு அங்கன்வாடி பணியாளர்களைக் கொண்டு நிரப்பிடவும் எஞ்சிய அங்கன்வாடிப் பணியாளர் காலிப் பணியிடங்களை நடைமுறையிலுள்ள ஆணைகளின்படி நிரப்பிடவும், அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷம்பு கல்லோலிகர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர் மற்றும் குழும இயக்குநர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்,
தரமணி, சென்னை - 600 113.
சமூக நல இயக்குநர், சென்னை-600015.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
அனைத்து மாவட்ட திட்ட அலுவலர்கள் (இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், சென்னை வழியாக).
நகல்
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலன்-மகளிர் உரிமை துறை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் நேர்முக உதவியாளர், சமூக நலன்-மகளிர் உரிமை துறை, சென்னை-9
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்